தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 21, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 ஏப்ரல் 4, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. **காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு."

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் ஆளுபவருக்கு உரியவை.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 80,* திரு. பி.ஜி. இராஜேந்திரன், *மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

80—

மேல்நிலைப் பள்ளி

***7077—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வி.கே. புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2002 ஏப்ரல் 4

மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் கேட்ட இந்தப் பள்ளியைக் குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலனை செய்து, அரசு நிதிநிலைக்கு உட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அகவிருள் அகற்றி, அறிவொளி வீச, அல்லும் பகலும் பாடுபடும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது தொகுதியிலுள்ள வீரகேரளம் புதூர் வட்டாரத் தலைநகர். அதுமட்டுமல்லாமல், இந்தப் பள்ளி, சுமார் 4 பஞ்சாயத்துகள் அடங்கிய பள்ளியாகும். இந்த உயர்நிலைப் பள்ளியில் சுமார் 1200 மாணவர்கள் பயில்கின்றனர். ஆண்டுக்காண்டு மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பை முடித்து விட்டு தொலைவில் உள்ள சுரண்டை தனியார் மேல்நிலைப் பள்ளியில்தான் வசதி உள்ளவர்கள் மட்டும் பயில முடிகிறது. மற்றவர்கள், குறிப்பாக ஆதி திராவிடர்கள், பெண்கள் படிப்பைத் தொடர முடிவதில்லை. ஆகவே, இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தரும்படி பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சராக புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே, திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் 3 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தரப்பட்டன. அதுபோல, இந்த ஆண்டும் சில பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசானது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. வருகின்ற 9, 10 ஆகிய இரண்டு தேதிகளில் கல்வி மானியத்தினுடைய விவாதம் நடைபெற இருக்கிறது. அதற்குப் பிறகு, எந்த அளவிற்கு நிதியானது கல்வி மானியத்திற்கு ஒதுக்கப்படுகிறது என்பதற்கு உட்பட்டு, அதன் மூலமாக, அந்த அளவைத் தெரிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 81, திருமதி கு. கலாவதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.